பிரஸார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 06 2024 **THURSDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. புதிய குற்றவியல் சட்டங்கள் நீதித்துறையின் சேவையை விரைவுபடுத்த உதவிடும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விரைவில் மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்து ஊக்கமளிக்கப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.

4. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அஇஅதிமுக மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

5. உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>><<<<

புதிய குற்றவியல் சட்டங்கள் நீதித்துறையின் சேவைகளை விரைவுபடுத்த உதவிடும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் கூட்டுக்கூட்டத்தில் இன்று உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

இந்த சட்டங்கள் அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்வு தொடர்பான அமைப்புகளில் பெரிய அளவில் சீர்திருத்தங்களை கொண்டு வர, மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

அண்மையில் சில தேர்வுகளின் வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது தொடர்பான பிரச்னையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

போட்டித் தேர்வுகளில் முறைகேடுகளை களைவதற்கு வகை செய்யும் சட்டம் இயற்றப்பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்வு நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும் எனறும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்ட சீர்த்திருத்த நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டார்.

விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு உரிய பலன் கிடைத்து வருவதாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக, சர்வதேச போட்டிகளில் இந்தியா பதக்கங்களை வென்று வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலக நாடுகளின் நம்பிக்கை நட்சத்திரமாக இந்தியா உருவெடுத்துள்ளதாகவும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

>>>><<<<

நாடாளுமன்றத்தில் குடியரசுத்தலைவர் ஆற்றிய உரை, வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த தொலைநோக்குத் திட்டம் மட்டுமின்றி சிறந்த நிர்வாகத்தை வெளிப்படுத்துவதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், இந்தியா பல்வேறு துறைகளில் படைத்து வரும் சாதனைகள் இந்த உரையில் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான அம்சங்கள குடியரசுத்தலைவர் உரையில் இடம்பெறவில்லை என்று காங்கிரஸ் கருத்து தெரிவித்துள்ளது.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை மீட்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினுக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், மீனவர்களின் நலனை பாதுகாப்பதற்கு உயர் முன்னுரிமை அளித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் தொடரும் என்றும் திரு. ஜெய்சங்கர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்கு தமிழக அரசு தொடர்ந்து ஊக்கமளிக்கும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சிறு குறு தொழில் நிறுவனங்கள் தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டுள்ளார்.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் இந்த நிறுவனங்கள் கூடுதலாக பங்களிப்பதற்கு தேவையான உதவிகளை மாநில அரசு வழங்கும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு 100 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

இதன்மூலம் 7 ஆயிரம் சுயஉதவி குழுக்கள் பயனடையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கிராமப்புற இளையோருக்கு 90 கோடி ரூபாய் செலவில் சுயவேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள விளையாட்டு அரங்கங்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

தேசிய அளவில் தங்கப்பதக்கம் வெல்பவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி 2 லட்சம் ரூபாயிலிருந்து 4 லட்சம் ரூபாயாக உயர்த்தப்படுவதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இந்த சம்பவத்தை கண்டித்து, சென்னையில் தமது தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் நிறைவுரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தமிழக சட்டப்பேரவையில் இப்பிரச்சினை குறித்து விவாதிக்க அஇஅதிமுகவிற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

பேரவை விதிகளில் கேள்வி நேரத்தை ஒத்தி வைத்துவிட்டு, விவாதிக்க இடம் உள்ளதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

>>>><<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் இதனை தெரிவித்த அவர், கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 51 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, நீலகிரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக, பொன்னானி, புன்னம்புழா ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகே விளம்பரப் பலகை பொருத்தப்பட்ட சிக்னல் கம்பம் பலத்த காற்றினால் சாய்ந்து விழுந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

>>>><<<<

காஞ்சிபுரம் மாவட்டம், ஏகனாம்பேட்டையில் உள்ள தொடக்கப் பள்ளியில் காலை உணவுத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாய பயன்பாட்டிற்காக நீர்நிலைகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் ஒப்புதலுக்குப் பின் மண் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. லட்சுமிபதி கூறியுள்ளார்.

>>>><<<<

குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு குறைந்ததை அடுத்து, மூன்று நாட்களுக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகள் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

தேனி மாவட்டம், மேகமலை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

கோவை மாவட்டம், பில்லூர் அணையின் நீர்மட்டம் அதன் முழுக்கொள்ளளவை எட்டியதை அடுத்து, வினாடிக்கு 14 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதன் காரணமாக, கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

நாமக்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் போதை எதிர்ப்புக் குழு உறுப்பினர்கள் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

கயானாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

இன்று காலை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா 9 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வென்று, முதல்முறையாக இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<

**Tunisia-**வில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manav Thakkar – Archana Kamat** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 3-1 என்ற ஆட்டக்கணக்கில் இந்தியாவின் **Ayhika - Snehit** இணையை வென்றது.

மற்றொரு முதல் சுற்று ஆட்டத்தில் **Sathyan Gnanasekaran – Sreeja Akula** இணையும் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. ஆடவர் ஒற்றையர் பிரிவில் சரத் கமலும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். முதல் சுற்று ஆட்டத்தில் அவர், பிரேஸிலின் **Eric Jouti-**யை வென்றார்.

>>>><<<<

**Romania** சர்வதேச செஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் **Gukesh** வெற்றி பெற்றுள்ளார்.

>>>>END<<<<